[1978 மார்ச் 4

பொருள் போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு இடைக்கால நிவாரணம்

*396. வினா—

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் தொழிலாளர்கட்கு அளிக்கப்பட்ட இடைக்கால நிவாரணம் ரூ. 27 பொருள் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கும் அளிக்கப்படுகின்றதா?

மாண்புமிகு திரு சி. பொன்னையன்: ஆம் அளிக்கப்படுகிறது

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, இந்த இடைக்கால நிவாரணம் கொடுப்பதுபற்றிச் சொல்லும்போது ஸ்டிரைக் நோட்டீசில் கண்டுள்ளபடி அடிப்படைச் சம்பளம், பஞ்சப் படி பற்றி எதுவும் சொல்லவில்லை. தற்போது அடிப்படைச் சம்பளம், பஞ்சப்படி பற்றிய கோரிக்கைகளைப் பற்றிப் பேசியதில் அரசாங்கம் ஒத்துக்கொள்ளவில்லை என்று கேள்விப்படுகிறேன். அது உண்மையா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, ஆரம்பத்தில் தொழிற்சங்கங்கள் எழுப்பிய கோரிக்கைகளில் அடிப்படைச் சம்பளக் கோரிக்கையை பல சங்கங்கள் கோர வில்லை. ஐக்கிய சங்கத்தின் கோரிக்கை, இப்போது எழுப்பப் பட்ட கோரிக்கை அரசின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் முடிவுசெய்யப்படும்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே இந்த பொருள் போக்கு வரத்துக் கழக ஊழியர்களான சில முன்னாள் இராணுவத்தினரை பழிவாங்கக்கூடிய அடிப்படையில் வேலை நீக்கம் செய்தும், பலரை ஊர்விட்டு ஊர் மாற்றமும் செய்திருக்கிறார்கள். அவை சரி செய்யப்படும் என்று இந்தச் சட்டமன்றத்தில் தெரிவிக்கப்பட்டும், இன்னும் அதற்கான நடைமுறைகள் எதுவும் செயல்படுத் தப்படாமல் இருப்பதற்குக் காரணம் என்ன? எப்போது சீர்செய்யப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, பழிவாங்கும் அடிப்படையில் யார்மீதும் நடவடிக்கை எடுக்க வில்லை. ஆனாலும் அப்படிப்பட்ட பொருள் போக்குவரத்துக் கழக ஓட்டுநர்கள் கோரிக்கைகள் அரசின் தீவிர பரிசீலனையில் இருக்கின்றன : விரைவில் முடிவு எடுக்கப்படும.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1978 மார்ச் 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தை சிறிது நீட்டிகிறேன்.

விவசாயிகள் பிரச்சினை குறித்த ஆணைக் குழு.

*397. வின—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு வேளாண்மைத்துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) : விவசாயிகள் பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்தறிய கமிஷன் அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ): இம் மாநில உழவர்களின் பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்திட ஓர் ஆணைக் குழு (Commission) அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை. எனினும் அரசு, அரசாங்க அலுவலகர்களும் அரசு அலுவலரல்லாதவர்களும் மற்றும் விவசாய சங்கங்களின் பிரதிநிதிகளும் அடங்கிய ஓர் குழுவை (Committee) அமைத்துள்ளது. இந்தக் குழு கீழ்க்கண்ட பொருள்கள் பற்றி ஆராயும்:—

1. விவசாய நீரேற்றும் குழாய்க்கான மின்கட்டணம்.
2. நெல் கொள்முதல் விலை.
3. கடன்களைத் திருப்பிக் கொடுப்பதில் காலம் அளித்தல்.
4. ஆக்க செலவுக்கேற்ப வேளாண்மை உற்பத்தி பொருட்களுக்கு குறைந்த அளவு விலை அறுதியிடல்.

இவற்றோடு இவை சம்பந்தமான விஷயங்கள் பற்றியும் இக்குழு ஆராயும்.

*398. வின—திரு. ரா. மார்க்கபந்து : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகளின் குறைகளைப் பற்றி ஆராய மேல் மட்டக்குழு ஒன்று அமைக்கப்பட்ட பிறகும், வரிகள், மின் கட்டணம், கடன்கள் முதலியவைகளைக் கட்டவேண்டாம் என்று போராட்டம் நடத்த விவசாய மக்கள் முடிவெடுத்திருப்பதால் வடாற்காடு மாவட்டத்தில் பதட்டமான நிலை உருவாகியிருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப்பற்றி அரசு என்ன முடிவெடுத்திருக்கிறது?